19th April 1960]

(*b*) if so, the action taken thereon;

(*c*) the reasons that prompted the Government to keep the Sanitary Inspectors and Health Assistants of Kanyakumari district as a separate cadre when in all other Departments they are integrated with the rest of the services in the Madras State; and

(*d*) the reasons for recruiting raw hands to the Health Inspector's posts in Kanyakumari district and appointing them over the head of those with equal qualification plus a number of years of service in the Department ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.
(*b*), (*c*) & (*d*) A paper[a] is placed on the table of the House.

SRI T. S. RAMASWAMI : May I know whether weightage has been given to seniority also ?

THE HON. SRI M. A. MANICKAVELU : Three persons have been equated to our Cadre. But the other people, because their scale of pay does not conform to our scales of pay—they are far below ours—have not been integrated. But suitable candidates will be appointed under the emergency provisions of the rules. There is a proposal to go into the whole question.

SRI T. S. RAMASWAMI : I am informed that more qualified and more senior people are being promoted to the next higher cadre. May I know whether the seniority of the men I have already referred to will also be taken into consideration in further promotions ?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir. As far as the Integration Rules permit, their claims will be taken into consideration.

SRI M. K. SOMASUNDARAM : நமது ராஜ்யத்தில் கன்னியாகுமரியில் இந்த உத்தியோகஸ்தர்களுக்குள்ள பே ஸ்கேலுக்கும் மற்றப் பகுதிகளில் உள்ள இந்த உத்தியோகஸ்தர்களுக்குள்ள பே ஸ்கேலுகக்கும் இடையிலே அதிக வித்தியாசம் இருக்கிறது. இந்த இரு பிரிவு உத்தியோகஸ்தர்களுக்கும் சமமான க்வாலிபிகேஷன் இருப்பதால், கன்னியாகுமரி ஜில்லாவிலுள்ள உத்தியோகஸ்தர்கள் சம்பளத்தையும், மற்ற ஜில்லாக்களிலுள்ள உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தையும் ஒரே அளவுள்ளதாக ஆக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : க்வாலிபிகேஷன் ஒரேமாதிரியாக இருக்கும் இடங்களில் அவர்களை ஏறக்குறைய அந்த மாதிரி இந்த ஸ்கேலுக்கு எடுத்துக்கொள்வோம். அப்படித்தான் மூன்று பேரை எடுத்துக் கொண்டோம். மற்ற 9 பேர்களை அவ்வாறு எடுத்துக்கொள்ள முடியவில்லை. ஏனென்றால் அவர்களுடைய க்வாலிபிகேஷன் அவ்வாறு இல்லை. உரிய யோக்கியதாம்சங்கள் இல்லாதவர்களை இப்போதுள்ள ரூல் பிரகாரம் எடுத்துக்கொள்ளமுடியாது. எனவே அவர்களை எமர்ஜென்ஸி முறையில் எடுத்துக்கொண்டு அவர்களுடைய உத்தியோகத்தை பிற்பாடு ரெகுலரைஸ் பண்ணவேண்டும்.

Arrest of certain American tourists

* 724 *Q.*—SRI A. A. RASHEED,
SRI N. K. PALANISAMY,
SRI M. P. SARATHI,
SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the circumstances under which Mr. Frederic March, and his actress wife, Dr. Burrill Crohn were arrested near Madurai;

---

a Printed as Appendix I on page 324 infra.

[19th April 1960

(*b*) whether it is a fact that they were subjected to wanton and unnecessary harassment by the Police;

(*c*) whether the Government have received any report in the matter from the Inspector-General of Police;

(*d*) whether any communication has been received in this connexion from the Central Government; and

(*e*) The reasons for withdrawing the prohibition case against Mr. Frederic March ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) *to* (*e*) The reports which the Government have received on the subject are under examination. A detailed statement will be placed on the table of the House shortly.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that on the day the Inspector-General of Police instituted enquiries the District Superintendent of Police, Madurai, came out with an explanation defending the action of the police and if so, how could there be an impartial enquiry ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I don't understand the question of the hon. Member. The District Superintendent of Police gave his version and it does not preclude the Inspector-General of Police from holding an enquiry.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that the arrest of Mr. Frederick March, his actress wife, Dr. Burrill Crohn has lead the Prime Minister, Jawaharlal Nehru, to apologise on behalf of the country ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I submit that the hon. Member need not drag the Prime Minister into this House.

SRI N. K. PALANISAMI : பார்லிமெண்டுக்கு இது சம்பந்தமான ரிப்போர்ட் அனுப்பப்பட்டு அங்கே பதில்சொல்லி 15 நாட்கள் ஆகிவிட்டன. "ஆனால் இப்போதுதான் இங்கே இன்டெரிம் ரிப்போர்ட் கொடுக்கப்படுகிறது அதற்குக் காரணம் என்ன ? மற்ற விஷயங்களை இந்த சபைக்கு தெரிவிக்கக்கூடாது என்ற எண்ணம் சர்க்காருக்கு இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவைகளை மூடி வைக்க வேண்டுமென்ற எண்ணம் சர்க்காருக்கு இல்லை. நான் கூட என் அபிப்பிராயத்தைப் பத்திரிகைகளுக்குத் தெரிவித்திருக்கிறேன். ஆனால் பிற்பாடு சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இங்கே பதிலில் அவைகளைத் தெரிவிக்க வேண்டுமென்றால், அவைகளை பரிபூரணமாகத் தெரிவிக்க வேண்டும். சில பரிசீலனைகள் இன்னும் முடிவடையாததால் அது இப்போது சாத்தியமில்லை. எனவேதான் விவரமான அறிக்கையை பிற்பாடு சமர்ப்பிப்பதாகச் சொல்லியிருக்கிறேன்.

SRI T. S. RAMASWAMI : Are the Government aware of the answer given in the Lok Sabha by the responsible Deputy Minister for Home and the Prime Minister also ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have just perused the report of the answer.

SRI S. LAZAR : Is it not a fact that there are all the ingredients of the offence concerned in the incident that took place on that day and is it not a fact that the Police was perfectly justified in framing

19th April 1960]

the charge even on technical grounds? But of course the Government thought it fit that it need not be pursued against the foreigners?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : That was so, Sir. I have stated to the press representatives who met me in these terms.

SRI A. A. RASHEED : What was the reason for demanding Rs. 80,000 as security since the offence was only a technical one?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have already stated that I will place the entire position on the table of the House. I have no particular information to offer to the hon. Member.

Scholarships to Refugees

* 725 —SRI S. M. ANNAMALAI (on behalf of SRI M. P. SARATHI) : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இந்த இராஜ்யத்தில் ((Scholarships for Refugees) அகதிகளுக்கு ஸ்காலர்ஷிப் எத்தனை பேருக்கு அளிக்கப்படுகின்றன ?

(ஆ) அந்த ஸ்காலர்ஷிப் பெறும் அகதிகள் எங்கிருந்து வந்த அகதிகள் ?

(இ) அவர்கள் தாய் மொழி என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) & (b) No scholarships as such are sanctioned to refugee students. However 29 displaced students from West Pakistan studying in institutions in this State were given cash grants, freeships and stipends to enable them to prosecute their studies during 1958-59.

(c) Information is not available.

SRI. S. M. ANNAMALAI : சிலோன், மலேயா போன்ற நாடுகளிலிருந்து இங்கு வந்திருக்கும் அகதிகளுக்கு என் ஸ்காலர்ஷிப்புகள் கொடுக்க அரசாங்கம் முன்வரவில்லை?

THE HON. SRI C. SUBRAMANIAM: அகதிகள் என்றால் என்ன அர்த்தம் என்பதைப் பற்றி நான் முன்பே சொல்லியிருக்கிறேன். அதை கனம் அங்கத்தினர் தெரிந்துகொண்டால், இந்த அகதிகளுக்கும் சிலோன், மலேயா போன்ற நாடுகளிலிருந்து இங்கு வருபவர்களுக்கும் உள்ள வித்தியாசம் அவருக்குத் தெரியும்.

SRI V. K. KOTHANDARAMAM : மலேயா, சிங்கப்பூர், சிலோன் ஆகிய நாடுகளிலிருந்து கூட, தங்கள் ஆஸ்திபாஸ்தி அவ்வளவையும் இழந்து இங்கு வந்திருக்கிறவர்கள் பலர் இருக்கிறார்கள். எனவே அத்தகைய அகதிகளுக்காவது ஸ்காலர்ஷிப் கொடுக்க சர்க்கார் முயற்சி செய்யுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதற்கு, கனம் அங்கத்தினர் ஸ்ரீ எஸ். எம். அண்ணாமலை அவர்களுடைய உப கேள்விக்கு சொன்ன பதிலைத் தான் நான் திருப்பிச் சொல்லவேண்டும்.

SRI M. K. SOMASUNDARAM : ரெப்யூஜிகளுக்குக் கொடுக்கப்படும் ஸ்காலர்ஷிப்பானது, ஹரிஜனங்களுக்கும் பிற்பட்ட வகுப்பினருக்கும் ஸ்காலர்ஷிப் கொடுப்பதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் பணத் தொகையிலிருந்து கொடுக்கப்படுகிறதா. அல்லது அதற்கென்று தனியாகப் பணத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. அவர்களுக்கு (ரெப்யூஜிகளுக்கு) இந்திய சர்க்காரால் கொடுக்கப்படுகிறது.